# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



05.02.2026 நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழில்கள்**

**ஆ. ராசா**



தமிழ்நாட்டு மலைப் பகுதிகளில் உணவு பதப் படுத்தும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஒன்றிய அரசிடம் உள்ள திட்டங்கள் குறித்து திமுக துணை பொடுச் செயலாளர் ஆ. இராசா கேள்வி எழுப்பியுள்ளார். தமிழ்நாட்டில் அமைக்கப்படும் உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் மற்றும் தொழிற்சாலைகள் மேம்பாட்டில், பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY), உணவு பதப்படுத்தும் தொழிலுக்கான உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகை (PLI) திட்டம் மற்றும் பிரதான் மந்திரி சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME) ஆகியவற்றில் அரசாங்கம் வகிக்கும் பங்கின் விவரங்கள் மற்றும் இதன்கீழ் தனியார் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**2. மண்டல வாரியாக உச்சநீதி மன்றத்தின் கிளைகள் அமைக்கப்படுமா?**

**பி.வில்சன்**



உச்ச நீதிமன்றத்தின் மண்டலக் கிளைகளை அமைப்பதற்கான சாத்தியங்களை ஆய்வு செய்வதற்கு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக எம்.பியும் வழக்கறிஞருமான பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

உயர் நீதித்துறையில் நீதிபதிகள் நியமனத்தில் சமூகப் பன்முகத்தன்மை மற்றும் சமூகப் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? 2021 ஆம் ஆண்டு முதல் உயர் நீதி மன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்ட பட்டியல் சாதி, பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொதுப் பிரிவு, பெண்கள் மற்றும் சிறுபான்மை நீதிபதிகளின் எண்ணிக்கை என்ன? 01.02.2026 நிலவரப்படி உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதி மன்றங்களில் உள்ள நீதிபதி பணியிடங்களின் காலியிடங்கள் எவ்வளவு?

**3. தேசிய நெடுஞ்சாலை தாமதத்தினால் மோசமாக பாதிக்கப்படுகிறது அரக்கோணம்- காஞ்சிபுரம் சாலை**

**க.செல்வம்**



பெங்களூரு மற்றும் சென்னையை இணைக்கும் நான்கு வழி பசுமைச்சாலையின் பெரும்பாலான பகுதிகள் நிறைவடையும் தருவாயில் இருந்தாலும் அதில் அரக்கோணம்-காஞ்சிபுரம் இடையேயான 25.5 கி.மீட்டரில் சுமார் 11 கி.மீ மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த தாமதத்திற்கான காரணம் என்ன என காஞ்சிபுரம் மக்களவை திமுக உறுப்பினர் செல்வம் நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார். இந்த தாமதத்தின் காரணமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் மற்றும் பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது.

மேலும் அரக்கோணம்-காஞ்சிபுரம் பிரிவில் ரயில்வே மேம்பாலங்கள், நிலம் கையகப்படுத்துதல் அல்லது நிறுவனங்களுக்கு இடையேயான அனுமதிகள் தொடர்பான சிக்கல்கள் உள்ளிட்டவை காரணங்களாக அரசு சொன்னால் அது ஏற்புடையதல்ல என்றும் மீதமுள்ள பணிகளை விரைவாக முடித்து விரைவுச் சாலையை முழுமையாக இயக்குவதை உறுதி செய்வதற்கு ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**4. நீதித்துறை தரநிலைகள் நிர்ணயிக்கும் மசோதாவின் நிலை என்ன?**

**டாக்டர் கனிமொழி சோமு**



நீதித்துறை தரநிலைகள் மற்றும் பொறுப்பேற்கும் மசோதாவை நாடாளுமன்றத்தில் மீண்டும் அறிமுகப்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா என்றும் அதை அறிமுகப்படுத்துவதற்காக முன்மொழி யப்பட்ட காலக்கெடு என்ன என்றும் நாடாளுமன்றத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பினார்.

**5. என்.டி.பி.சி விரிவாக்கம் பற்றி உறுதியான செய்திகளை வெளியிடுக!**

**டி.எம்.செல்வகணபதி**



தேசிய அனல் மின் கழகம் (என்.டி.பி.சி) நாட்டின் பல்வேறு இடங்களில் சுமார் 30 ஜிகாவாட் திறன் கொண்ட சொந்த அணுசக்தி திட்டங்களை அமைப்பது குறித்து பரிசீலித்து வருவது குறித்து திமுக சேலம் மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார். 2047-ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி திறனைப் பெறுவதென அரசாங்கம்முடிவெடுத்திருப்பதன் காரணம் என்ன? என்.டி.பி.சி தொழில்நுட்பம் மற்றும் எரிபொருள் துறையில் பன்னாட்டு கூட்டுமுயற்சிகளை பெற விளைகிறதா? என்.டி.பி.சி 2032-ஆம் ஆண்டிற்கு 2 ஜிகாவாட் அணுசக்தி திறனை இலக்காகக் கொண்டுள்ளது பற்றி மேலும் தகவல்களை அளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்..

**6. சிறு நிறுவனங்களுக்கான 25 லட்சம் கோடி கடன் பற்றாக் குறையை தீர்க்க நடவடிக்கை என்ன?**

**அருண் நேரு**



2024-25 மற்றும் 2025-26 நிதியாண்டு களில் தங்கள் பதிவை ரத்து செய்த அல்லது செயல்பாடுகளை நிறுத்திய பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSME) மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்றும் பல கடன் திட்டங்கள் இருந்தபோதிலும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனத் துறைக்கான கடன் பற்றாக்குறை (28 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது) அதிகரித்து வருவது ஏன் என கேட்டும் திமுக பெரம்பலூர் மக்களவை தொகுதி உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் அவர் கேட்டுள்ளதாவது:

நடப்பு நிதியாண்டில் செயல்படாத சொத்துக்களாக (NPAs) மாறியுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனக் கடன்களின் சதவீதம் எவ்வளவு? அவசரகால கடன் உத்தரவாதத் திட்டம் (ECLGS) சிறு நிறுவனங்களை நிரந்தரமாக மூடும் நிலையிலிருந்து காப்பாற்றத் தவறியதற்கான காரணங்கள் யாவை? குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை மோசடி கடன் வழங்கும் செயலிகளிடமிருந்து பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**7. நீதிபதிகளுக்கு எதிரான புகார்களை விசாரிக்க நடவடிக்கை!**

**டாக்டர் கனிமொழி சோமு**

இந்தியத் தலைமை நீதிபதி மற்றும் உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளால் பெறப்பட்ட நீதிபதிகளுக்கு எதிரான புகார்களை விசாரிக்கும் நடைமுறைகள் குறித்து திமுக எம்.பி. டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளில் விசாரித்து முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் அடையாளங்களை வெளியிடாமல் முடித்து வைக்கப்பட்ட அல்லது அறிவுரை வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**8. காலநிலை உச்சி மாநாடு(COP30) - முடிவுகள் என்ன?**

**எஸ்.ஆர். சிவலிங்கம்**



பிரேசிலின் பெலெம் நகரில் நடைபெற்ற COP30 உச்சி மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்று, காலநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகளை விட நாம் பருவநிலை மாற்றங்களுக்கேற்ப தகவமைத்துகொள்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். வளர்ந்த நாடுகளிடமிருந்து இதற்கான நிதிப் பாய்ச்சலை மும்மடங்காக அதிகரிக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை மற்றும் பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரிவு 9.1 கடமைகள் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு ஆகியவற்றின் விவரங்கள் யாவை? COP30 மாநாட்டில் இந்தியாவின் சர்வதேச பருவநிலை நிதி கோரிக்கைகளுக்கும், 202324 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு தேசிய பருவநிலை மாற்றத் தகவமைப்பு நிதியுதவி நிறுத்தப்பட்ட தற்கும் இடையே உள்ள முரண்பாடுகளை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**9. தொழிலாளர் சட்டத் தொகுப்பு வரைவிற்கு மக்களின் கருத்துகளை பெற நடவடிக்கை என்ன?**


**ராஜாத்தி சல்மா**



தொழிலாளர் சட்டத் தொகுப்பு விதிகள் குறித்த வரைவுகளின்மீது அரசாங்கம் பொதுமக்களின் கருத்துக்களை பெறுகிறதா? என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார். மொத்தமுள்ள நான்கு சட்டத் தொகுப்புகளையும் ஒரே நேரத்தில் வெளியிட்டதற்கான காரணங்கள் என்ன? கருத்துக்களைச் சமர்ப்பிக்க அதிகபட்சம் நாற்பத்தைந்து நாட்கள் மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டதால், தொழிலாளர்களுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் அனைத்து வரைவுகளுக்கும் திறம்படப் பதிலளிக்க மிகக் குறைந்த நேரமே உள்ளதை கருத்தில் கொள்ளாதது ஏன்? காலக்கெடுவை நீட்டிக்கவும், பரவலாகப் பரப்புவதற்கும், அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்புகளை வழங்குவதற்கும் கோரி அமைச்சகத்திற்கு வந்த மனுக்கள் மீதான நடவடிக்கை என்ன? ஒரு திறமையான கலந்தாய்வு செயல்முறைக்கு போதுமான நேரத்தை வழங்கும் வகையில், கலந்தாய்வை மேலும் நாற்பத்தைந்து நாட்களுக்கு நீட்டிக்கஅமைச்சகம்திட்டமிட்டுள்ளதா? எனும் பல்வேறு கேள்விகளையும் அவர் இணைத்துள்ளார்.

**10. காதிப்பொருட்களுக்கான இணைய விநியோக வசதி?**

**ஆ. மணி**



கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாட்டில் உள்ள காதி மற்றும் கிராமத் தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகளை, குறிப்பாக உற்பத்தி, விற்பனை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் ஆய்வு செய்துள்ளதா என தர்மபுரி எம்.பி. ஆ.மணி நாடாளுமன்றத்தில் பின்வரும் கேள்வி எழுப்பியுள்ளார்:

மாநிலத்தில் உள்ள காதி நிறுவனங்கள், பதிவுசெய்யப்பட்ட கைவினைஞர்கள் மற்றும் செயல்படும் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் உள்கட்டமைப்பை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? விளிம்பு நிதி மானியம், சந்தைப்படுத்துதலில் உதவி, மற்றும் மூலப்பொருள் கிடைப்பதிலுள்ள தாமதங்களை சரி செய்யும் முயற்சி போன்றவற்றால் தொழிலாளர்கள் கண்ட பயன்கள் என்ன? அதற்காக பயன்படுத்தப் பட்ட நிதி எவ்வளவு? கைவினைஞர்களின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக, சந்தைத் தொடர்புகளை வலுப்படுத்தவும், பிராண்ட் விளம்பரத்தை மேற்கொள்ளவும் மற்றும் காதிப் பொருட்களை மின் வணிகத் தளங்களுடன் ஒருங்கிணைக்கவும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

**11. கள்ளக்குறிச்சியில் உணவு பதப்படுத்துதல் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துக!**

**தே.மலையரசன்**



கள்ளக்குறிச்சி தொகுதியில் குளிர் பதனக் கிடங்குகள், ஒருங்கிணைந்த விநியோகச் சங்கிலிகள் மற்றும் உணவு பதப்படுத்தும்அலகுகள்போன்றஉள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என நாடாளுமன்றத்தில் திமுக எம்.பி. மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா, மெகா உணவுப் பூங்காக்கள் மற்றும் குளிர்பதனச் சங்கிலி கூறுகள் போன்ற முக்கியத் திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட, நடைபெற்று வரும் மற்றும் முடிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் யாவை? தமிழ்நாட்டின் வேளாண்காலநிலைத் திறனைச் சிறப்பாகக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு, பாரம்பரிய மற்றும் மண்டல வாரியாக உணவுப் பொருட்களை ஊக்குவிப்பது உட்பட, உணவு பதப்படுத்துதல் துறைக்குள் பன்முகத்தன்மையை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்முயற்சிகள் யாவை? சர்வதேச சந்தைகளில் இந்திய உணவுப் பொருட்களின் போட்டித்தன்மையை மேம்படுத்த அரசாங்கம் முன்மொழியும் திட்டங்கள் யாவை? ஏற்றுமதி சார்ந்த உள்கட்டமைப்பு, தரப் பரிசோதனை வசதிகள் மற்றும் தளவாடங்களை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்..



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (06.02.2026) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக சேலம் மாவட்டத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.196.92 கோடி மதிப்பிலும், ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.13.50 கோடி மதிப்பிலும், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறையின்சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சி, திடீர் நகர் திட்டப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய குடியிருப்புகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## 14 மாவட்டங்களில் – 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில்

# ரூ. 34 ஆயிரம் கோடி மதிப்பில் - பல்வேறு தொழில் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல்!

## செய்தியாளர் பேட்டியில் – தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

**சென்னை, பிப். 8 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 5.2.2026 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் “சென்னை, செங்கல்பட்டு உள்பட 14 மாவட்டங்களில் 55 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் வகையில், ரூ.34 ஆயிரம் கோடி மதிப்பில் பல்வேறு தொழில் திட்டங்கள் தொடங்கிட ஒப்புதல் தரப்பட்டது” என்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டார்.**

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இன்றைய அமைச்சரவையில், ஏறத்தாழ 15 முதலீட்டு திட்டங்களுக்கு முதலமைச்சர் திராவிட நாயகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக ஒட்டுமொத்தமாக 34,237.39 கோடி ரூபாய்க்கான முதலீடு, 55,096 நபர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கக்கூடிய ஒரு அற்புதமான பல திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறது நமது அமைச்சரவை.

இத்திட்டங்கள் மாநிலத்தின் பரவலான வளர்ச்சிக்கு உறுதி செய்யும் விதமாகவும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி,கரூர், திருப்பூர், ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ளன.

இதில் மிக முக்கியமான ஒரு திட்டம் வருகின்ற 13-ஆம் தேதி அதற்கான அறிவிப்பு வெளிவரும். 12-ஆம் தேதி உங்களுக்கு நன்றாக தெரியும் - கன்வெர்ஷன் கான்க்ளேவ். இதுவரைக்கும் எந்த அரசாங்கமும் நடத்தாத ஒரு கன்வெர்ஷன் கான்க்ளேவ் நடத்த இருக்கிறோம். அன்றும் பல அறிவிப்புகள் வரவிருக்கின்றன.

குறிப்பாக, இதில் கெயின்ஸ் சர்க்யூட் லிமிடெட் என்னும் மின்னணுவியல் நிறுவனம், அதாவது பிரிண்டட் சர்க்யூட் போர்ட்ஸ், பிசிபிஸ், கேமரா மாடியூல்ஸ், லேமினேட்ஸ் இதையெல்லாம் செய்கின்ற கேமரா மாடியூல்ஸ் எல்லாம் இப்போது மிகவும் முக்கிய மான தேவை. மேம்பட்ட உற்பத்தி.

அடுத்து, ஜான்சன் எலெக்ட்ரிக் - வாகன மின்னணு உபபாகங்கள், ஆக்சுவேட்டர்ஸ், பிஎல்டிசி மோட்டார்ஸ், பவர் கூலிங் மோட்டார்ஸ் இதையெல்லாம் உற்பத்தி செய்கின்ற ஒரு நிறுவனம்.

எவர்வேன் கோத்தாரி ஃபுட்வேர் - இவர்கள் ஏறத்தாழ 25,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க உள்ளார்கள். அடுத்ததாக, தமிழ்நாட்டிற்கு அதிதாஸ் பிராண்டை கொண்டு வர இருக்கிறோம்.

சென்னை ராதா இன்ஜினியரிங் - இதுவும் மிகவும் முக்கியமான ஒரு இன்வெஸ்ட்மெண்ட். ஷிப் பில்டிங்கில் உங்களுக்கே நன்றாக தெரியும். ப்ளூ எக்கனாமி அடுத்த கட்டத்திற்கு கொண்டு சேர்க்கவேண்டும். தமிழ்நாட்டின் முழுமையான கோஸ்ட் நல்லபடியாக உபயோகப்படுத்த வேண்டும். அங்கே இருக்கின்ற நம்முடைய மீனவ நண்பர்களுக்கு மிகப்பெரிய ஒரு வாழ்வாதாரத்தை வழங்க



வேண்டும் என்ற நோக்கத்தோடு ஷிப் பில்டிங்கில் ஒரு பெரிய முன்னெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது. அந்த விதத்தில் நம்முடைய சென்னை ராதா இன்ஜினியரிங் ஷிப் ஹல்ஸ் செய்கின்ற ஒரு திட்டத்தில் அவர்கள் இறங்கி இருக்கிறார்கள். அதற்கான ஒப்புதலும் இன்று கிடைத்திருக்கிறது.

அதேபோல, ஜோனஸ் என்ற ஒரு ஏரோஸ்பேஸ் அண்ட் டிபன்ஸில் (A&D) ரெடார், ரெடார் சிஸ்டம், ஆர்டிலரி ஷெல்ஸ், மிசைல் சப் சிஸ்டம்ஸ் இதையெல்லாம் செய்யப் போகிறார்கள். இது ஒரு மிகப்பெரிய ஒரு முன்னெடுப்பு. அதற்கான ஒப்புதலும் இன்று கிடைத்திருக்கிறது.

யசாக்கி இந்தியா பிரைவேட் லிமிடெட் - வாகன உபபாகங்கள், வயரிங் ஹார்னஸ், பஸ்ஸ்பார்ஸ் இதெல்லாம் செய்கின்ற நிறுவனம்.

அதையடுத்து, ஹூண்டாய் ஏற்கனவே இருக்கின்ற சில நிறுவனங்களுக்கான அந்த விரிவாக்கத்திற்காகவும் (expansions) நாங்கள் இன்றைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஜெட்சால் எனும் ஒரு நிறுவனம் - அவர்கள் சோலார் செல் உற்பத்தி செய்வதற்கு தூத்துக்குடிக்கு வந்திருக்கிறார்கள்.

எனவே, தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட வளர்ச்சியை தொடர்ந்து உறுதி செய்யப்பட்டு, இந்தியாவின் நம்பர்-1 மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை தொடர்ந்து உறுதி செய்யும் இந்த வேலையை திராவிட நாயகன் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார். அந்த வகையில், தொழில் துறையில், இன்று ஏறத்தாழ 34,000 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் - 55,000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வரவிருக்கின்றன. அதற்கான ஒப்புதல் இன்றைக்கு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் மூலம் எங்களுக்கு கிடைத்திருக்கிறது.

கேள்விக்கான பதில் - ராணிப்பேட்டையில் வருகின்ற 9-ஆம் தேதி டாடா ஜேஎல்ஆர் - எல்லோரும் சொன்னார்கள் - முதலில் வின்பாஸ்ட் வரும் போது இப்படித்தான் சொன்னார்கள். வின்பாஸ்ட் நிறுவனம் கையெழுத்திடமாட்டார்கள் - சும்மா கதை விடுகிறார்கள் என்று சொன்னார்கள். இரண்டு மாதத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது - அடுத்து, கிட்டத்தட்ட 14 மாதத்திற்குள் ஃபேக்டரிக்கான சோதனை ஓட்டம் நடந்தது. பிறகு, இறுதியாக தொழிற்சாலையை திறந்து வைத்து இன்றைக்கு வின்பாஸ்ட் நிறுவனம் இந்தியாவில் நான்காவது டாப் செல்லிங் காராக இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து செல்கின்ற இந்த வின்பாஸ்ட். இதைத்தான் டாட்டாவிற்கு வராது என்று சொன்னார்கள் - ஒன்றரை மாதத்தில், இந்த லேண்ட் சீல் செய்து, ராணிப்பேட்டையில் ஒரு கல்யாண மண்டபத்தை எடுத்து, நம்முடைய அதிகாரிகள் அங்கேயே உட்கார்ந்து இரவு-பகலாக வேலை செய்து, அந்த நிலத்தை உறுதி செய்ததால், டாட்டா ஜாகுவார் லேண்ட் ரோவர் முதலாவதாக எனக்கு தெரிந்து, ஈவி பிளஸ் லக்ஸரி செக்மெண்டில் இரண்டும் சேர்ந்து கிடைக்கின்ற ஒரு மிகப்பெரிய இன்வெஸ்ட்மெண்ட். தமிழ்நாட்டின் வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய ஒரு நாள் அன்று.

எனவே அன்று 9-ஆம் தேதி சந்திரசேகர் அவர்களும், நம்முடைய டாடா CEO அவர்களும், முதலமைச்சர் அவர்களும் இணைந்து இந்த டாட்டா JL ரோவார் நீங்கள் எல்லோரும் காண இருக்கிறீர்கள். ஒரு ஆட்சியில் இப்படி ரெண்டு பெரிய கார் நிறுவனங்கள் இந்த ஸ்பீடில் எப்போது வந்தது என்று நீங்கள் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுதான் திராவிட நாயகன், திராவிட மாடல் அரசின் வேகம். இது தொடரும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டியின் போது குறிப்பிட்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை கு. சுல்தான் மொய்தீன்

**பிப்ரவரி 8 (2009)**



தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக நான்கு முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

மூன்று முறை தஞ்சை நகர்மன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நகரமன்றத் துணைத் தலைவராகவும் தொடர்ந்து தூய பணியாற்றியதன் பலனாக 2001ஆம் ஆண்டு நகர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை மக்கள் போற்றும் வண்ணம் பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் இவரது மனிதநேயமிக்க தொண்டினைப் பாராட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் “கோட்டை அமீர்” விருது வழங்கினார்.

தலைமைக் கழகம் சார்பில் 2004ஆம் ஆண்டு “கலைஞர் விருது” தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.